



# பட்டன் ஹோல் தைத்து பொருத்துவது எப்படி

இந்த வீடியோவில் பட்டன் தைப்பது பற்றியும் காஜா எடுக்கும் முறை பற்றியும் பார்க்கலாம்.









இதற்கு தேவையான பொருட்கள் 10 இன்சிற்கு 10 இன்ச் அளவில் ஒரு துணி, 4 துளையுள்ள தட்டையான பட்டன், வாட்டர் சால்யுபல் மார்க்கர், தையல் பிரிக்கும் ரிப்பர், ஸ்கேல் மற்றும் குண்டூசிகள்.

முதலில் துணியின் நடுவில் ஸ்கேல் வைத்துக் கொண்டு துணியின் இரண்டு ஓரங்களிலும் ஒரு இன்ச் மார்க் செய்துகொள்ளவும்.

இடது பக்கம் மார்க் செய்துள்ள இடத்தில் பட்டனை வைக்கவும். செங்குத்தாக இரண்டு பாயின்டுகள் வைத்துக் கொள்ளவும். இது 8 ல் ஒரு பாகம் இடைவெளியில் இருக்க வேண்டும். பிறது இந்த பாயின்டுகளை ஒரு நேர் கோட்டினால் இணைத்துக் கொள்ளவும். இது பட்டன் ஹோலின் நீளத்தை குறிக்கும்.


இப்போது காஜா தைக்கும் முறையைப் பார்க்கலாம்.

பிரஷர் புட் ஐ மேலே தூக்கி வழக்கம் போல அகற்றிவிட்டு, பிறகு பட்டன் ஹோல் புட் ஐ சரியாக வைத்து லீவரை கீழே இறக்கி பொருத்தி விடவும்.

துணியை புட்க்கு கீழே பட்டன் ஹோலின் தொடக்கப் புள்ளியில் வைக்கவும். ஸ்லைடரை உங்களை நோக்கி தள்ளிக் கொண்டு புட் ஐ கீழே இறக்கவும். துணியின் ஆரம்பப் புள்ளியும் புட்டின் மேல் இருக்கும் அம்புக்குறியும் சரியாக பொருந்துமாறு பார்த்துக்கொள்ளவும்.














பேட்டர்ன் செலக்டரை 1 ல் வைத்து தையல் நீளத்தை 0 லிருந்து 1 க்கு இடையில் வைத்துக் கொள்ளவும். இப்பொழுது முன்னோக்கி தைக்கத் தொடங்கவும். பட்டன் ஹோலின் அடுத்த மார்க்கிங் வரும் வரை தைக்கவும்.

இப்பொழுது ஊசியை மேலே தூக்கி விட்டு பேட்டர்ன் செலக்டரை 2 ல் வைத்து சில தையல்கள் போட்ட பின்னர் நிறுத்திவிடவும்.

இப்போது ஊசியை மேலே தூக்கி பேட்டர்ன் செலக்டரை 3 ஆம் எண்ணில் வைக்கவும். பின்னோக்கி தைக்கவும். ஆரம்ப தையலை நெருங்கும் வரை தைக்கவும்.

பிறகு ஊசியை தூக்கி பேட்டர்ன் செலக்டரை 4 ல் வைத்து சில தையல்கள் போட்ட பின் நிறுத்தவும்.


புட் ஐ தூக்கி துணியை வெளியே எடுக்கவும். மீதமுள்ள நூலை த்ரெட் கட்டரால் கத்தரிக்கவும். துணியில் உள்ள நூல் பிசுறுகளை இரண்டு புறமும் கத்தரிக்கவும்.


இப்போது துணியின் எதிர்பக்கம் பட்டனை தைக்கவும்.

பட்டனை தைக்க பீட் டாக் பொசிஷனை கீழ் இறக்கவும். அதற்கு எக்ஸ்டன்ஷன் டேபிளை அகற்றி விட்டு பாபினை வைக்கும் ஷட்டரை திறக்கவும். பீட் டாக்கை கீழ் இறக்க லீவரை வலதுபுறம் நகர்த்தவும்.

இப்போது ஸ்லைடரை மூடிவிட்டு எக்ஸ்டன்ஷன் டேபிளை பிக்ஸ் பண்ணவும். புட் ஸ்லைடரை பட்டனின் முன்பக்க ஹோலுக்கு தகுந்தாற் போல் வைத்துக்கொண்டு புட் ஐ கீழே இறக்கவும்.

ஊசி மேலே இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும். ஸிக்ஸாக்காக தைப்பதற்கு பேட்டர்ன் செலக்டரை ஊ யில் வைத்துக்கொள்ளவும். கையால் பேலன்ஸ் வீலை சுற்றிக் கொள்ளவும். துளைக்குள் சரியாக போய் வருகிறதா என்று கவனித்து முதல் ஹோலில் சில தையல்கள் போடவும்.





அடுத்த பட்டன் ஹோலை தைக்க ஊசியை மேலே தூக்கி முன்னால் இருக்கும் புட்டின் நுனியை சரியாக வைத்து சில தையல்கள் போடவும். ஊசியை மேலே தூக்கி பேட்டர்ன் செலக்டரை டீ யில் வைத்து தைத்த தையலை லாக் செய்யவும்.

பட்டன் அட்டாச் செய்த துணியை வெளியே எடுத்து பிசிறு எல்லாவற்றையும் கத்தரிக்கவும்.

இப்போது ஒரு பின்னை கொண்டு மேலே இருக்கும் பட்டன் ஹோலை பின் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் உள்ளே வெட்டும் போது தையல் பிரியாமல் பாதுகாக்கும். இப்போது தையல் பிரிக்கும் ரிப்பரால் நிதானமாக பட்டன் நுழைவதற்கு ஓப்பன் செய்துகொள்ளவும். பின்னையும் அகற்றவும்.

இப்போது பட்டனும் அதைப் பொறுத்து காஜாவும் ரெடி ஆகிவிட்டது. நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் துணியை மடித்து பட்டனை நுழைக்க வேண்டியது தான்.

இதை தொடர்ந்து பயிற்சி எடுத்தால் சுலபமாகவும் சிறப்பாகவும் தைக்க முடியும்.